# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| 8th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| 7th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 6th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 1st to 5th Standard | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| Exams | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
|---|---|---|---|---|---|---|
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |


| Portal | Matrimony | Mutual Transfer | Job Portal |
|---|---|---|---|

| Volunteers | Centum Team | Creative Team | Key Answer Team |
|---|---|---|---|

| Downloads | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
|---|---|---|---|---|---|---|
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com



SHRI KRISHNA ACADEMY

## சிறப்பம்சங்கள்

- அரசுப் பொதுத்தேர்வு விடைக்குறிப்புகள் அடிப்படையில் கற்றல் கையேடு(Minimum Material) உருவாக்கப்பட்டுள்ளது.
- மெல்லக் கற்கும் மாணவர்கள் விரைவாகக் கற்று அதிக மதிப்பெண் பெறும் வகையில் இவ்விடைக்களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பொதுத்தேர்வு தேர்வில் கட்டாயமாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு(அகவய வினாக்கள்) விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- கற்பதற்கு எளிய நடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- புறவய வினாக்கள் மற்றும் அகவய வினாக்கள் விடைக்குறிப்புகளுடன் அமைந்துள்ளது.
- அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் மாதிரி வினாத்தாள் கிடைக்கும்.

CONTACT:9965531727,9443231727

வகுப்பு: 12 மதிப்பெண்: 14
பாடம்: பொதுத்தமிழ் தேர்வு - 1 காலம்: 10 நிமிடம்

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
அ)சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் **இ) மழைத்துளிகள்** ஈ) நீர்நிலைகள்
2. கடலின் பெரியது …………..
அ) உற்ற காலத்தில் செய்த உதவி **ஆ) பயன் ஆராயாமல் ஒருவன் செய்த உதவி**
இ) திணையளவு செய்த உதவி ஈ) மறந்துவிட்ட உதவி
3. தேயிலைத் தோட்டப்பாட்டு என்னும் நூலின் ஆசிரியர்
அ) முகம்மது இபுராகிம் ஆ) முகம்மது அப்துல் காதர்
**இ) முகம்மது இராவுத்தர்** ஈ) அப்துல் ரகுமான்
4. ''உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும்'' - இத்தொடர் உணர்த்துவது.
**அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
இ) காலநிலை மாறுபடுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.
5. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம் துணி சார்ந்ததாகவோ இருந்தது.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு **ஈ) கூற்று சரி காரணம் சரி**
6. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி, வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் **ஈ) கிறுத்துவமும் தமிழும்**
7. இயற்சீர் வெண்டளை என்பது
அ) காய் முன் நேர் **ஆ) மா முன் நிரை** இ) மா முன் நேர் ஈ) விளம் முன் நிரை
8. Matro train – என்பதன் தமிழ்ச்சொல்
அ) நகரத் தொடர் வண்டி **ஆ) மாநகரத் தொடர் வண்டி**
இ) மின் தொடர் வண்டி ஈ) நவீனத் தொடர் வண்டி
9. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலை மீது ஏறிக கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
**இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.
10. 'வளர்தலம்' - இலக்கணக்குறிப்பு தருக.
அ) வேற்றுமைத்தொகை **ஆ) வினைத்தொகை**
இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை
11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.
அ) 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சு.ப. மாணிக்கம்
ஆ) இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர்.
இ) ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமை கொண்டவர்
**ஈ) 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர்.**
12. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிக்கான சான்று.
அ) எத்திசை ஆ) வெங்கதிர் இ) பூம்பாவாய் **ஈ) ஆங்கவற்றுள்**
13. 'முதல்கல்' என்னும் சிறுகதை மையக்கருத்து
அ) இயற்கைப் போற்றுதல் ஆ) தன்னலம் காத்தல்
**இ) பொதுநலன் பேணல்** ஈ) இயற்கையை அழித்தல்
14. பின்வறுவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ)கர்ணன் தோற்றான் போ. **ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி.**
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.

**வகுப்பு: 12** **மதிப்பெண்: 14**

**பாடம்: பொதுத்தமிழ்** **தேர்வு - 2** **காலம்: 10 நிமிடம்**

1. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
2. "விண்வேறு ; விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும முகிலும் வேறு" – தொடர் தரும் முழுமையான பொருள்
அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
**ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு**
3. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு **ஆ) கூற்று 1, 2 சரி**
இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
4. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பெருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் **இ) தொல்காப்பியம்** ஈ) நன்னூல்
5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
அ) அறவோர், துறவோர் **ஆ) திருமணமும் குடும்பமும்**
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
6. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் **இ) திண்டிவனம்** ஈ) தருமபுரி
7. தமிழில் திணைப்பாகுபாடு ................ அடிப்படையில் பகுப்பட்டுள்ளது.
**அ) பொருட்குறிப்பு** ஆ) சொற்குறிப்பு இ)தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
8. Train Track – என்பதன் தமிழ்ச்சொல்
அ) நடைமேடை **ஆ) இருப்புப்பாதை** இ) ஓடுபாதை ஈ) குறுகியபாதை
**9.** பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க.
**அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
10. 'செந்நிறம்' - இலக்கணக்குறிப்பு தருக.
அ)பெயரெச்சம் ஆ) வினையெச்சம் **இ) பண்புத்தொகை** ஈ) உரிச்சொல்தொடர்
**11.** சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.
**அ) சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை**
ஆ) பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை எனவும் வழங்கப்பெற்றுள்ளன.
இ) இவற்றுள் நால் என்பது நாலடியரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
ஈ) உ.வே.சா. சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
12. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிக்கான சான்று
அ) எத்திசை ஆ) வெங்கதிர் இ) பூம்பாவாய் **ஈ) உறைந்தற்று**
**13.** தலைக்குளம் கதையின் கருப்பொருள்
**அ) கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியதைப் பற்றிப் பேசுவது**
ஆ) தனக்கு உதவி செய்த மனிதனை தேடிக் கண்டுபிடித்து நன்றி பாராட்டுவது.
இ) பெண்களின் அவலநிலையும் ஆண்களின் அடக்குமுறையும்.
ஈ) இறந்து போன மனிதனின் சிறப்புகளைப் பேசுவது.
14. குறியீடுகளைப் பொருத்துக.
அ) பெண் - 1. சமாதானம் ஆ) புறா - 2. வீரம்
இ) தராசு - 3. விளக்கு ஈ) சிங்கம் - 4. நீதி
அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 **இ) 3,1,4,2** ஈ) 3,1,2,4

வகுப்பு: 12 மதிப்பெண்: 14

பாடம்: பொதுத்தமிழ் தேர்வு - 3 காலம்: 10 நிமிடம்

1. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்க தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
   க)பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ)பொதிகையில் தோன்றியது
   ங)வள்ளல்களைத் தந்தது
   அ) க–மட்டும் சரி ஆ) க உ-இரண்டும் சரி இ) ங- மட்டும் சரி **ஈ) க ங -இரண்டும் சரி**
2. இவற்றை வாயிலுக்கே என்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது?
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை **ஈ) இவை அனைத்தும்**
3. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளை கண்டுபிடிக்க.



   அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது
   ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தேய்வத்துள் வைக்கப் படும்.
   **இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
   **ஏமாப் புணையைச் சுடும்.**
4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு **இ) கடுக்காய்** ஈ) மாவிலைக்கரி
5. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம், காரணம் -
   அ) நேரம், மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை **ஈ) அ,ஆ,அ அனைத்தும்**
6. பொருந்தாததைக் கண்டறிக.
   அ) இளந்தமிழே - சிற்பி
   ஆ) தமிழ்மொழியின் நடை அழகியல் - தி. சு. நடராசன்
   இ) தன்னேர் இல்லாத தமிழ் - தண்டி
   **ஈ) தம்பி நெல்லையப்பர்க்கு - நெல்லையப்பர்**
7. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே
   அ) அஃறிணை, உயர்திணை **ஆ) உயர்திணை, அஃறிணை**
   இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
8. Eraser என்பதன் தமிழ்ச்சொல்
   அ) கோப்பு **ஆ) அழிப்பான்** இ) மை பொதி ஈ) மடிப்புத்தாள்
9. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
   **இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**
   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்
10. 'புக்க' - இலக்கணக்குறிப்பு எழுதுக.
   **அ) பெயரெச்சம்** ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) உரிச்சொல்தொடர்
11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.
   அ) ஒவ்வொரு தொடரிலும் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஆகியவை அமைந்திருக்கும்.
   ஆ) பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை எனவும் வழங்கப்பெற்றுள்ளன.
   இ) இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்
   **ஈ) உ.வே.சா. சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.**
12. கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை ................
   **அ) காண்(கண்) + ட் + ஆன்** ஆ) கண் + ட் + ஆன்
   இ) காண் + ட் + ட் + ஆன் ஈ) காண்டு + ஆன்
13. 'கோடை மழை' கதையின் உட்பொருள்
   **அ) முதியோர்களை அரவணைப்பது** ஆ) இளைஞர்களின் காதல்
   இ) வரண்ட நிலத்தின் நிலை ஈ) ஏழைகளின் கண்ணீர்

14. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது.
**அ) குறியீடு** ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

**வகுப்பு: 12** **மதிப்பெண்: 14**
**பாடம்: பொதுத்தமிழ்** **தேர்வு - 4** **காலம்: 10 நிமிடம்**

1. நடுங்கும்படியான துன்பம் யாருக்கில்லை?
**அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்**
ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்
ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்
2. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் **ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
3. நான் வெற்று வெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன். எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாக குறிப்பிடுவது.
அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
**இ) தமது அடையாளத்தை** ஈ) தமது படைப்புகள்
4. வெள்ளச் சமவெளிகள் அழியக்காரணம்
அ) பருவநிலை மாற்றம் **ஆ) மணல் அள்ளுதல்**
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு **இ) கடுக்காய்** ஈ) மாவிலைக்கரி
6. 'முளரிமருங்கின் முதியோள் சிறுவன்' எனக் கூறும் நூல்
**அ) புறநானூறு** ஆ) பதிற்றுப்பத்து இ) பரிபாடல் ஈ) அகநானூறு
7. வெண்பாவின் ஓசை
அ) அகவலோசை **ஆ) செப்பலோசை** இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை
8. platform – என்பதன் தமிழ்ச்சொல்லை தேர்ந்தெடுக்கவும்.
அ) இருப்பு பாதை **ஆ) நடைமேடை** இ) தொடர்வண்டி ஈ) வழிக்குறி
9. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
அ) பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
ஆ) பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்
அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 **இ) 4,3,1,2** ஈ) 2,4,1,3
10. 'வளைஇ' – என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
**அ) பண்புத்தொகை** ஆ) எண்ணும்மை இ) சொல்லிசை அளபெடை ஈ) உம்மைத்தொகை
11. பொருத்துக.
அ) அவன் அவள் அவர் - 1. உளப்படுத்தாதத் தன்மைப்பன்மை
ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை
இ) நாம் முயற்சி செய்வோம் - 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்
ஈ) நாங்கள், நாம் - 4. பதிலிடு பெயர்கள்
**அ) 4,1,2,3** ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ)4,3,1,2
12. இயல்பினும் விதியினும் நின்ற உயர்முன் கசதப மிகும் என்ற விதிக்கான சான்று.
**அ) எத்திசை** ஆ) வினையெச்சம் இ) பண்புத்தொகை ஈ) உரிச்சொல்தொடர்
13. சிவாஜி கணேசனுக்குச் செவாலியர் விருதளித்த அரசு
அ) ஆங்கில அரசு **ஆ) பிரெஞ்சு அரசு** இ) இந்திய அரசு ஈ) இலங்கை அரசு
14. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்
ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்பமுடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
**ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழிகள் மூலம் விளக்குவது.**

வகுப்பு: 12 மதிப்பெண்: 14

பாடம்: பொதுத்தமிழ் **தேர்வு - 5** காலம்: 10 நிமிடம்

1. 'உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்' – யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் **இ) இராமன், சுக்ரீவன்** ஈ) இராமன், சவரி
2. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?
   அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
   இ) எண்ணியாங்கு எய்துபவர் **ஈ) தீயினத்தார்**
3. அதிசிய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
   அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
   இ) பச்சையம் இழந்த நிலத்தை **ஈ) அனைத்தையும்**
4. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக் கூறும் நூல்
   அ) புறநானூறு **ஆ) பதிற்றுப்பற்று** இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை
5. பொருத்துக.
   அ) தமிழ் அழகியல் - 1. புரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2. தி.சு.நடராசன்
   இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4. கி.ராஜநாராயணன்
   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 **ஈ) 2,3,4,1**
6. கூவம் ஆற்றை .................. என்றும் அழைத்தனர்.
   அ) வடபழனி ஆறு **ஆ) திருவல்லிக்கேனி ஆறு** இ) மாதவரம் ஆறு ஈ) பல்லாவரம் ஆறு
7. 'பஞ்சகாப்பியம்' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்
   அ) நன்னூல் **ஆ) தமிழ்விடுதூது**
   இ) பொருள்தொகை நிகண்டு ஈ) திருத்தணிகை உலா
8. Fiction என்பதன் தமிழ்ச் சொல்லை தோந்தெடுக்கவும்.
   **அ) புனைவு** ஆ) சட்டம் இ) ஆவணம் ஈ) கோப்பு
9. சரியான தொடரைக் கண்டுபிடி.
   அ) ஆண்டுதோறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.
   **ஆ) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்**
   இ) தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் மறைந்த கூட்டம் நடைபெறும்.
   ஈ) மறைந்த நினைவாக தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.
10. அறிவும் புகழும் - என்பதன் இலக்கணக்குறிப்பு
    அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) தொழிற்பெயர் **ஈ) எண்ணும்மை**
11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.
    **அ) ''என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது'' என்று கூறினான்.**
    ஆ) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.
    இ) ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.
    ஈ) இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
12. 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி அமைந்த சொல்
    அ) கொடுங்கோல் ஆ) புதுப்பெயல் **இ) வலனேற்பு** ஈ) கண்ணுடைய
13. 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதை எடுத்துரைப்பது
    **அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை**
    ஆ) வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள்
    இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை
    ஈ) இவற்றில் எதுவுமில்லை
14. பாட்டும் உரைநடையும கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது
    அ) கம்பராமாயணம் **ஆ) சிலப்பதிகாரம்** இ) குண்டலகேசி ஈ) வளையாபதி

வகுப்பு:12 பாடம்: பொதுத்தமிழ்

**உரைநடை பாடல்வரி - நூல் பெயர்**

**இயல் - 1**

1. "அந்நில மருங்கின் அறமுதலாகிய

 மும்முதற் பொருட்கும் உரிய என்ப" - **தொல்காப்பியம் (செய்யுளியல்.105)**

2. 'நடைபெற்றியலும்' - **தொல்காப்பியம் (கிளவியாக்கம் 26)**

3. 'நடைநவின்றொழுகும்' - **தொல்காப்பியம் (செய்யுளியல்.135)**

4. ஆசிரிய நடைத்தே வஞ்சி ; ஏனை

 வெண்பா நடைத்தே கலி - **தொல்காப்பியம் (செய்யுளியல்.107)**

5. "கடந்தடு தானை மூவிருங்கூடி

 உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;

 முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;

 முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர் ;

 யாமும் பாரியும் உளமே;

 குன்றும் உண்டுநீர் பாடினீர் செலினே" - **புறநானூறு (110)**

6. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்

 கடாஅ யானைக் கலிமான் பேக - **புறநானூறு (145)**

7. "புணரின் புணராது பொருளே; பொருள்வயின்

 பிரியின் புணராது புணர்வே - **நற்றிணை (16)**

8. "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை" - **புறநானூறு (290)**

9. சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு தொகைநிலை என்று சொல்லும் நூல் - **தொல்காப்பியம் (எச்சவியல்)**

10. 'நீர்படு பசுங்கலம்' – **நற்றிணை (308)**

11. 'இடுக வொன்றோ, சுடுகவொன்றோ

 படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே – **புறநானூறு (239)**

**(நெடுஞ்செழியன் சாவு கிடங்கு சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடிய பாடல்)**

**இயல் - 3**

1. திருமணம், குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே இடம்பெறாத நூல் - **தொல்காப்பியம், சங்க இலக்கியம்**
2. குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்ற நூல் - **திருக்குறள்(1029)**
3. "இரவுக் குறியே இல்லகத் துள்ளும்

 மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே

 மனையகம் புகாஅக் காலை யான" என்ற பாடல் இடம் பெற்ற நூல் -

 **தொல்காப்பியம்(பொருளியல்-129)**

4. ‘இல்’, ‘மனை’ என்ற இரண்டு வாழிடங்களைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்ற நூல் - **தொல்காப்பியம்**
5. மனைவியின் இல்லத்தை ‘தம்மனை’ என்றும் கணவனின் இல்லத்தை ‘நும்மனை’ என்றும் பிரித்துக் கூறும் நூல் - **அகநானூறு 346, 16-17 (மருதத்திணை)**
6. தற்காலிகமாகத் தங்குமிடத்தைப் ‘புக்கில்’ என்று சொல்லால் குறிப்பிடும் நூல்- **புறநானூறு (221-6)**
7. இளந்தம்பதியருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலியருக்குரியது என்று கூறும் நூல் - **தொல்காப்பியம்(பொருள் -151)**
8. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை கூறும் நூல் - **பதிற்றுப்பத்து**
9. தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்படுகிறது எனக் கூறும் நூல் - **பதிற்றுப்பத்து**
10. ‘சிறுவர்தாயே பேரிற் பெண்டே’ - என்ற பாடலடி இடம்பெற்ற நூல் - **புறநானூறு - 270**
11. ‘செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்’- என்ற பாடலடி இடம்பெற்ற நூல் - **புறநானூறு - 276**
12. ‘வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்’ -என்ற பாடலடி இடம்பெற்ற நூல் - **புறநானூறு - 277**
13. ‘முளரிமருங்கின் முதியோள் சிறுவன்’ - என்ற பாடலடி இடம்பெற்ற நூல் - **புறநானூறு - 278**
14. என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்’ - என்ற பாடலடி இடம்பெற்ற நூல் - **கலித்தொகை - பாலை -8**
15. திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்திற்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்ததைக் கூறும் நூல் - **அகநானூறு (24:10, 274:14, 284:13)**
16. தாய்வழிச்சொத்துகள் பெண்டிருக்குப் போய் சேர்ந்தன என்பதை விளக்கும் நூல் - **குறுந்தொகை 295 (மருதத்திணைப்பாடல்)**
17. ‘நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
    எம்மனை வதுவை நல்மணம் கழிக’ எனக் கூறும் நூல் - **ஐங்குறுநூறு (399:1-2)**
18. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே’ எனக் கூறும் நூல் - **குறுந்தொகை (135)**
19. பெண் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையைக் கூறும் நூல் - **குறுந்தொகை (135)**
20. இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளைத் தெளிவுபடுத்தும் நூல் - **ஐங்குறுநூறு (408)**
21. ‘மறியிடைப் படுத்த மான்பிணைபோல்’
    மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும்
    தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் என்பதைக் கூறும் நூல் - **ஐங்குறுநூறு (401)**
22. பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருப்பதைச் சுட்டும் ஆய்வுகள் - **இனவரைவியல் ஆய்வு**
23. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையைக் கூறும் நூல் - **ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப்பாடல் 279**
24. அகநானூறு 346 ஆவது பாடலில் வரும் நும்மனை என்பது - **கணவனின் இல்லம்**

வகுப்பு:12 மதிப்பெண்:80

பாடம்: பொதுத்தமிழ் **ஆண்டுகளும், நூற்றாண்டுகளும்** காலம்: 30 நிமிடம்

**இயல் - 1**

1. தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் எங்கு எப்போது எழுதப்பட்டது -
2. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூல் வெளியிட்ட ஆண்டு –
3. வம்சமணி தீபிகை என்ற பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு கடிதம் எழுதிய ஆண்டு –
4. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் அப்படியே வெளியிடப்பட்ட ஆண்டு –
5. தண்டி எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர் -

**இயல் - 2**

1. உலகப் புவி நாள் -
2. உலகச் சுற்றுச் சூழல் நாள் -
3. மும்பையில் ஒரே நாளில் 994மி.மீ மழை பெய்த ஆண்டு –
4. ஜம்மு காஷ்மீர் மாநிலம் 'லே' பகுதியில், 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ. வரை மழையளவு பதிவான ஆண்டு –
5. ஐக்கிய நாடுகள் அவை ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கிய ஆண்டு –
6. இந்திய வானிலை ஆய்வுத் துறையினர் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்த ஆண்டு –
7. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை நடுவணரசு அமைத்த ஆண்டு –

**இயல் - 3**

1. ஜலாலுத்தீன் ரூமி இன்றை ஆப்கானிஸ்தான் நாட்டில் பிறந்த ஆண்டு –
2. கம்பராமாயணம் எழுதப்பட்ட நூற்றாண்டு –
3. பூமணி அவர்கள் அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு -
4. ஏட்டுச்சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு –

**இயல் - 4**

1. அக்கால அறிஞர்கள் எந்த நூற்றாண்டின் பள்ளிக்கூட விளைச்சல்கள் -
2. சென்னைப் புரசைவாக்கம் சர்.எம்.சி.டி. முத்தையா உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதற்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்ட ஆண்டு –
3. சென்னைப் புரசைவாக்கம் சர்.எம்.சி.டி. முத்தையா உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதற்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு சுதேசமித்திரன் வார இதழில் கட்டுரை (உயிர்மீட்சி)வெளியான ஆண்டு –
4. உ.வே.சா. அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற ஆண்டு –
5. சாலைப் போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் -
6. பாரிஸ் நகரத்தில் முதல் 'பன்னாட்டு சாலை அமைப்பு' (**International Road congress**) மாநாடு நடைபெற்ற ஆண்டு –
7. திருத்தி அமைக்கப்பட்ட மோட்டார் வாகனச் சட்டம் வெளியிடப்பட்ட ஆண்டு -
8. எழுத்து என்ற இதழில் எந்த ஆண்டு முதல் சி.மணியின் கவிதைகள் வெளிவந்தன –

**வகுப்பு:12** **மதிப்பெண்:80**

**பாடம்: பொதுத்தமிழ்** **ஆண்டுகளும், நூற்றாண்டுகளும்** **காலம்: 30 நிமிடம்**

**இயல் - 1**

1. தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் எங்கு எப்போது எழுதப்பட்டது - புதுச்சேரி - 19 ஜீலை 1915
2. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூல் வெளியிட்ட ஆண்டு – 1879
3. வம்சமணி தீபிகை என்ற பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு கடிதம் எழுதிய ஆண்டு – 06.08.1919
4. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் அப்படியே வெளியிடப்பட்ட ஆண்டு – 2008
5. தண்டி எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர் - 12 ஆம் நூற்றாண்டு

**இயல் - 2**

1. உலகப் புவி நாள் - ஏப்ரல் - 22
2. உலகச் சுற்றுச் சூழல் நாள் - ஜீன் - 5
3. மும்பையில் ஒரே நாளில் 994மி.மீ மழை பெய்த ஆண்டு – 2005
4. ஜம்மு காஷ்மீா மாநிலம் ‘லே’ பகுதியில், 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ. வரை மழையளவு பதிவான ஆண்டு – 2010
5. ஐக்கிய நாடுகள் அவை ரியோ டி ஜெனிரோவில் காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கிய ஆண்டு – 1992
6. இந்திய வானிலை ஆய்வுத் துறையினா் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்த ஆண்டு – 2009
7. தேசிய பேரிடா் மேலாண்மை ஆணையத்தை நடுவணரசு அமைத்த ஆண்டு – 2005 டிசம்பா் - 23

**இயல் - 3**

1. ஜலாலுத்தீன் ரூமி இன்றை ஆப்கானிஸ்தான் நாட்டில் பிறந்த ஆண்டு – கி.பி.(பொ.ஆ.) 1207
2. கம்பராமாயணம் எழுதப்பட்ட நூற்றாண்டு – 12 ஆம் நூற்றாண்டு
3. பூமணி அவர்கள் அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு - 2014
4. ஏட்டுச்சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு – 1812

**இயல் - 4**

1. அக்கால அறிஞர்கள் எந்த நூற்றாண்டின் பள்ளிக்கூட விளைச்சல்கள் - 19 ஆம் நூற்றாண்டு
2. சென்னைப் புரசைவாக்கம் சா்.எம்.சி.டி. முத்தையா உயா்நிலைப்பள்ளி ஆசிரியா் சங்கத்தின் முதற்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்ட ஆண்டு – 20.07.1936
3. சென்னைப் புரசைவாக்கம் சா்.எம்.சி.டி. முத்தையா உயா்நிலைப்பள்ளி ஆசிரியா் சங்கத்தின் முதற்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு சுதேசமித்திரன் வார இதழில் கட்டுரை (உயிா்மீட்சி)வெளியான ஆண்டு – 16.08.1936
4. உ.வே.சா. அவா்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டா் பட்டம் பெற்ற ஆண்டு – 1932
5. சாலைப் போக்குவரத்து உதவிக்குத் தொலைபேசி எண் - 103
6. பாரிஸ் நகரத்தில் முதல் ‘பன்னாட்டு சாலை அமைப்பு’ (**International Road congress)** மாநாடு நடைபெற்ற ஆண்டு – 1909
7. திருத்தி அமைக்கப்பட்ட மோட்டாா் வாகனச் சட்டம் வெளியிடப்பட்ட ஆண்டு - 2017
8. எழுத்து என்ற இதழில் எந்த ஆண்டு முதல் சி.மணியின் கவிதைகள் வெளிவந்தன – 1959

வகுப்பு: 12 மதிப்பெண்: 60

பாடம்: பொதுத்தமிழ் **PTA** காலம்: 30 நிமிடம்

**மாதிரி வினாத்தாள் - 1**

1. பொருத்தி விடை தேர்க:

| | |
|---|---|
| அ) உரிமைத்தாகம் | 1. பாரசீகக் கவிஞர் |
| ஆ) அஞ்ஞாடி | 2. பூமணி |
| இ) ஜலாலுதீன் ரூமி | 3. பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்பமுறை | 4. சாகித்ய அகாதெமி. |

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 **இ) 2,4,1,3** ஈ) 2,3,4,1

2. “மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) சீர்மோனை அடி எதுகை ஆ) சீர்மோனை சீர் எதுகை
**இ) அடி எதுகை சீர் மோனை** ஈ) சீர் எதுகை அடி மோனை

3. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர்
அ) நெல்லையப்பர் **ஆ) பாரதியார்** இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

4. எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்?
அ) 2 **ஆ) 3** இ) 4 ஈ) 5

5. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் **ஆ) கணிதம்** இ) புவியியல் ஈ) வேளாண்மை

6. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சி துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு **ஈ) காட்சி மறைவு**

7. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற ‘மயிலை சீனி. வேங்கடசாமி’ எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் **ஈ) கிறிஸ்தவமும் தமிழும்**

8. திட்டம் என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கு தவங்கள் எதற்காக? வரம் எதற்குக் குறியீடாகிறது?
அ) அமுத சுரபி ஆ) ஆதிரைப்பருக்கை **இ) திட்டம்** ஈ) பயனற்ற விளைவு

9. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்னும் விதிப்படி அமைந்த சொல்
அ) மண்ணில் ஆ) திரைப்படம் இ) இல்லை **ஈ) பின்னிரவில்**

10. தொல்காப்பியர் குறிப்பிடும் ‘மெய்ப்பாடு’
அ) ஆறு ஆ) ஏழு **இ) எட்டு** ஈ) ஒன்பது

11. ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் எடுக்கப்பட்ட ஆண்டுகள்
அ) 20 **ஆ) 30** இ) 40 ஈ) 20

12. தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல்
**அ) தொல்காப்பியம்** ஆ) புறப்பொருள் வெண்பாமாலை
இ) தொன்னூல் விளக்கம் ஈ) நன்னூல்

13. கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
அ) காண் + ட் + ஆன் **ஆ) காண்(கண்) + ட் + ஆன்**
இ) காண + ட + ட+ ஆன ஈ) காண்டு + ஆன்

14. உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு உவமையை மட்டும் கூறுவது
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி **ஈ) உள்ளுறை உவமம்**

## மாதிரி வினாத்தாள் - II

1. பொருத்தி விடை தேர்க :

| | |
|---|---|
| அ) தமிழ் அழகியல் | 1. பரலி சு. நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | 2. தி.சு.நடராஜன் |
| இ) கிடை | 3. சிற்பி.பாலசுப்ரமணியம் |
| ஈ) உய்யும் வழி | 4. கி. ராஜநாராயணன் |

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 **ஈ) 2,3,4,1**

2. மனித சமூகத்தின் அடிப்படை அலகு ________ .
   அ) குலம் ஆ) கூட்டம் **இ) குடும்பம்** ஈ) பெருங்குழு
3. பழந்தமிழர் ஓர் ஆண்டை ________ பருவங்களாக வகைப்படுத்தினர்.
   அ) நான்கு **ஆ) ஆறு** இ) எட்டு ஈ) பத்து
4. கவிஞர் சுரதா நடத்திய கவிதை இதழ்________ .
   அ) இலக்கியம் **ஆ) காவியம்** இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
5. நெடுநல்வாடை________அடிகளைக் கொண்டது.
   அ) 144 ஆ) 150 **இ) 188** ஈ) 196
6. ‘குழிமாற்று’ எந்தத் துறையோடு தொடர்புடையது சொல்.
   அ) இலக்கியம் **ஆ) கணிதம்** இ) புவியியல் ஈ) வேளாண்மை
7. மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள்________ .
   **அ) வட சென்னைப் பகுதிகள்** ஆ) தென் சென்னைப் பகுதிகள்
   இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும்
8. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   **இ) காலையில் பூத்த மல்லிகை மணம் வீசியது**
   ஈ) நெற்பயிர்கள் நீரில் முழ்கின.
9. பொருந்தாத சொல்லை அறிக.
   அ) உறுப்பினர் ஆ) குழுவினர் **இ) இயக்குனர்** ஈ) ஊரினர்
10. வெண்பாவிற்குரிய ஓசை
    **அ) செப்பலோசை** ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை
11. படிமம் என்பதன் பொருள்
    அ) சொல் ஆ) செயல் **இ) காட்சி** ஈ) ஒலி
12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி
    **அ) குறியீடு** ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்
13. உயிரெழுத்துக்கள் ________வகைப்படும்.
    அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு **ஈ) இரண்டு**
14. ‘முதல்கல்’ என்னும் சிறுகதையின் ஆசிரியர்
    அ) பூமணி **ஆ) உத்தமசோழன்** இ) பிரபஞ்சன் ஈ) நா. காமராசன்

வகுப்பு: 12 | மதிப்பெண்:61
பாடம்: பொதுத்தமிழ் | QR CODE ONE MARK ANSWER | காலம்: 30 நிமிடம்

**இயல் - 1(உயிரினும் ஓம்பப்படும்)**

1. இலக்கியத்தின் நோக்கம் குறித்து மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டும் இலக்கண நூல்
அ)நன்னூல் ஆ)தண்டியலங்காரம் **இ)தொல்காப்பியம்** ஈ) இலக்கண விளக்கம்
2. வேறுபாடான ஒன்றை தேர்க.
அ) ஒளிப்பறவை **ஆ)அலையும் சுவடும்** இ) சர்ப்பயாகம் ஈ)சூரிய நிழல்
3. 'யாமும் பாரியும் உளமே –அடிக்கோடிட்ட சொல் குறிக்கும் புலவர்
அ)ஔவையார் ஆ)பரணர் இ)நக்கீரர் **ஈ) கபிலர்**
4. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் பாடல் (செய்யுள்) இடம்பெற்றுள்ள நூல்
**அ)புறநானூறு** ஆ)கலித்தொகை இ)அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து
5. 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலைப் பதிப்பித்தவர்
அ) இளசைமணி ஆ) சு.நெல்லையப்பர் **இ)ரா.அ.பத்மநாபன்** ஈ) பெ.சு.மணி
6. எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிசேகரிசாமி தீட்சிதர் எழுதிய நூல்
அ)தரும தீபிகை **ஆ)வம்சமணி தீபிகை** இ)பிரபந்த தீபிகை ஈ) அனுபவாநந்த தீபிகை
7. கீழ்வருவனவற்றுள் அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்
அ)முத்து வீரியம் ஆ)வீர சோழியம் இ) இலக்கண விளக்கம் **ஈ) தண்டியலங்காரம்**
8. 'ஈறுபோதல்' என்ற ஒரு விதியில் மட்டும் புணரும் பண்புத்தொகைச் சொல்
**அ)செம்பரிதி** ஆ)செந்நிறம் இ) செந்தமிழ் ஈ) வெங்கதிர்
9. 'இளந்தமிழே' என்னும் தலைப்பில் அமைந்த மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெற்ற நூல்
அ)ஒளிப்பறவை **ஆ) நிலவுப் பூ** இ)சூரிய நிழல் ஈ)பூஜ்சியங்களின் சங்கிலி
10. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே ---------என்கிறோம்
அ) இலக்கியத் தனம் ஆ) கலை முழுமை **இ)ஒலிப்பின்னல்** ஈ) தொகை நிலை

**இயல் - 2(பெய்யெனப் பெய்யும் மழை)**

1. "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று கூறிய அறிவியல் கருத்தாளர்
அ)ஆல்வின் **ஆ) டேவிட் கிங்** இ) ஆயிசா ஈ) முத்துக்குமரன்
2. 'ஆனந்த்" வேளாண்மை பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம்
அ)மகாராஷ்டிரம் ஆ)கர்நாடகம் **இ)குஜராத்** ஈ) ஆந்திரபிரதேசம்
3. உலக சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுவது
அ)ஜுன் 15 ஆ) ஜுலை 15 **இ)ஜுன் 5** ஈ)ஜுலை 5
4. அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதை குறும்படம்
அ) மழைக்குப் பிறகும் மழை **ஆ) இன்று** இ)நானென்பது வெறொருவன் ஈ)நீர்வெளி
5. 'கிழக்கு வாசல் உதயம்' என்பது
அ) சிறுகதைத் தொகுப்பு ஆ) கட்டுரைத் தொகுப்பு **இ) திங்களிதழ்** ஈ) கவிதைத் தொகுப்பு
6. நெடுநல்வாடை பாடலில் அமைந்துள்ள திணை
அ)வெட்சித் திணை **ஆ)வாகைத்திணை** இ) பாடாண் திணை ஈ) பொதுவியல் திணை
7. 'கண்ணி'என்பது
பொருள் 1) தலையில் சூடும் மாலை
பொருள் 2) இரண்டு அடிகளால் ஆன பாடல் வகை
**அ) இரண்டும் சரி** ஆ) இரண்டும் தவறு இ) பொருள் 1 சரி ஈ) பொருள் 2சரி

8. கூற்று 1) உலக மொழிகள் அனைத்திலும் வினைச் சொற்களே மிகுதி என்பர்
கூற்று 2) திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படை பண்புகள்
அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1சரி, 2தவறு
இ) கூற்றுகள் இரண்டும் தவறு **ஈ) கூற்று 1தவறு 2சரி**
9. கருத்து 1) கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குச் சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.
கருத்து 2) வங்கக்கடலிலும் அரபிக் கடலிலும் உருவாகும் புயல்களுக்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு ஆகிய ஐந்து நாடுகள் அனுமதி பெற்றுள்ளன.
**அ) கருத்து 1சரி 2தவறு** ஆ) கருத்துக்கள் இரண்டும் சரி
இ) கருத்துக்கள் இரண்டும் தவறு ஈ) கருத்து 1தவறு 2சரி
10. கருத்து 1) கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் போன்றவற்றை ‘மாற்று ஆற்றல்கள்’ என்பர்
கருத்து 2) ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவற்றை ‘பசுமைக்குடில் வாயுக்கள்’ என்பர்.
**அ)கருத்துக்கள் இரண்டும் தவறு** ஆ)கருத்துக்கள் இரண்டும் சரி
இ)கருத்து 1 மட்டும் சரி ஈ) கருத்து 2 மட்டும் தவறு

## இயல் -3(சுற்றத்தார் கண்ணே உள)

1. பொருந்தாதைத் தேர்க
**அ) வயிறுகள்** ஆ) வெக்கை இ) அஞ்ஞாடி ஈ) பிறகு
2. “உடுபதி” பொருள்
அ) சூரியன் **ஆ) சந்திரன்** இ) உலகம் ஈ) விண்மீன்
3. “தாகங்கொண்ட மீனொன்று” என்ற நூலின் மூல நுலை எழுதியவர்
**அ) ஜலாலுத்தீன் ரூமி** ஆ) என் சத்தியமூர்த்தி
இ) கோல்மன் பார்க்ஸ் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்
4. எதிர்பாராத விருந்தாளிகள் என ஜலாலுத்தீன் ரூமியால் குறிப்பிடப்படுபவர்கள்
அ) பறவைகள் **ஆ) ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம்**
இ) நண்பர்கள் ஈ) உறவினர்கள்
5. “யாவரும் கேளிர்” பயின்று வரும் நூல்
அ) திருக்குறள் **ஆ) புறநானூறு** இ) கம்பராமாயணம் ஈ) அகநானூறு
6. மறியிடைப்படுத்த மான்பிணைப்போல் - இவ்வடி குறிப்பிடும் குடும்ப முறை
அ) தனிக்குடும்பம் ஆ) விரிந்த குடும்பம்
இ) தந்தை வழிக் குடும்பம் ஈ) தாய்வழிக்குடும்பம்
7. ‘தந்தனன் தாதை தன்னைத் தடக்கையான் எடுத்துச் சார்வான்’- தூக்கியவன் யார்? தூக்கப்பட்டவன் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) குகன், இலக்குவன் **இ) இராமன், சடாயு** ஈ) சவரி, சுக்ரீவன்
8. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக்கூறும் நூல்
**அ) பதிற்றுப்பத்து** ஆ) தொல்காப்பியம் இ) புறநானூறு ஈ) ஐங்குறுநூறு
9. “எனக்கும் மூத்தோன்” எனக் கூறியவன், கூறப்பட்டவன்
அ) இராமன் சடாயு ஆ) குகன், பரதன் **இ) பரதன், குகன்** ஈ) கம்பன், இராமன்
10. பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றி ஆய்வு செய்தவர்.
அ)தி.சு. நடராசன் **ஆ)பக்தவத்சல பாரதி** இ)ஜலாலுத்தீன் ரூமி ஈ)அ.கா பெருமாள்

## இயல் -4(செல்வத்துள் எல்லாம் தலை)

1. ஒருவருடைய புகழ் ,வலிமை, கொடை அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்புத்துக் கூறுவது
அ)பொதுவியல் திணை ஆ)வாகைத்திணை **இ)பாடாண் திணை** ஈ) தும்பைத்திணை
2. முழுக்க முழுக்க கவிதைகளையே கொண்ட நூல்
அ) மங்கையர்க்கரசி ஆ)அமுதும் தேனும் இ)தேன்மழை **ஈ)காவியம்**

வகுப்பு:12 பாடம்: பொதுத்தமிழ்

## திருப்புதல் தேர்வு அகவய வினாக்கள்

### இயல் - 1

1. சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் யாவை? (2மதிப்பெண்) பக்க எண் - 3
2. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக. (4 மதிப்பெண்) விடைக்களஞ்சியம் பக்க எண் - 26

### இயல் - 2

1. வாகைத்திணை – குறிப்பு எழுதுக. (2 மதிப்பெண்) பக்க எண் - 30
2. கூதிர்ப்பாசறை எனும் துறைப்பற்றி எழுதுக. (4 மதிப்பெண்) பக்க எண் - 30
3. மழையைக் கணிக்கும் அறிகுறிகள் யாவை? (2 மதிப்பெண்) பக்க எண் - 27
4. தனிமனிதன் ஒருவன் தன் முதல் முயற்சியின் மூலம் ஊரையே திருத்துவதை முதல்கல் சிறுகதையின் மூலம் விளக்குக. (6 மதிப்பெண்)
5. எவற்றையெல்லாம் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறோம்? (2 மதிப்பெண்) - 25
6. தமிழ்ச்சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது? (2 மதிப்பெண்) - 24

### இயல் -3

1. குடும்பமே மனித சமுதாயத்தின் அடிப்படை விளக்குக. (2 மதிப்பெண்) பக்க எண் -48
2. தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள் யாவை? (4 மதிப்பெண்) - 48
3. இராமன் கூறிய ஐவர், அறுவர் என்பவரின் பெயர் என்ன? விளக்கம் தருக. (4 மதிப்பெண்) புத்தக வினா

### இயல் - 4

1. நாராசம், தூக்கு என்பது யாது? (2 மதிப்பெண்) பக்க எண் - 83, 84
2. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை? (2 மதிப்பெண்) பக்க எண் - 97
3. பாடாண் திணை என்றால் என்ன? (2 மதிப்பெண்) பக்க எண் - 89
4. வெண்பாவின் இலக்கணம் எழுதி வகைகளைக் கூறுக. (4 மதிப்பெண்) பக்க எண் - 97
5. மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்ட நூல்கள் எது? (2 மதிப்பெண்) பக்க எண் - 82
6. ஓதற் பிரிவு – விளக்குக. (2 மதிப்பெண்) பக்க எண் - 84
7. மையாடல் என்றால் என்ன? (2 மதிப்பெண்) பக்க எண் - 82
8. விண்வெளியில் இயங்குவனவாகச் சுரதா கூறுவன யாவை? (2 மதிப்பெண்) – 86
9. பரிசில் துறை விளக்கம் தருக. (4 மதிப்பெண்) - விடைக்களஞ்சியம் பார்க்க.

### இயல் - 5

1. கன்னி மாரா நூலகம் - குறிப்பு வரைக (2 மதிப்பெண்) பக்க எண் - 110
2. அகநானூறு எத்தனை பிரிவுகளாகப் பரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை? (2 மதிப்பெண்) பக்க எண் - 117
3. சென்னையின் நீர்நிலைகள் குறித்து எழுதுக. (4 மதிப்பெண்) பக்க எண் - 107
4. இந்தோ சாரசனிக் கட்டக்கலை –விளக்குக. (4 மதிப்பெண்) பக்க எண் - 109
5. மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது எது? (2 மதிப்பெண்) பக்க எண் - 108
6. சென்னையின் தொன்மையை விளக்கும் சான்று யாவை? (4 மதிப்பெண்) பக்க எண் -106

### இயல் -6

1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோ வடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக. (6 மதிப்பெண்) பக்க எண் - 138, 139
2. சிறுகாப்பியம் என்றால் என்ன? (2 மதிப்பெண்) பக்க எண் - 150
3. ஒலிக்குறிப்பு - விளக்குக. (4 மதிப்பெண்) பக்க எண் - 134
4. திக்ரேட் டிக்டேட்டர்- குறிப்பு வரைக. (4 மதிப்பெண்) பக்க எண் - 132
5. ‘கீழ்நீர்க் குளித்தானை தீத்துரீஇ யற்று’-பொருள் கூறுக. (2 மதிப்பெண்) பக்க எண் - 159
6. திரைப்படத்துறை தோற்றம் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களைக் குறிப்பிடுக. (4 மதிப்பெண்) – 130

.

# பகுதி – I – பொதுத்தமிழ்
# Language – part I – TAMIL

வகுப்பு : XII மதிப்பெண்கள் : 90

நாள்:21.02.2020 முழுத்தேர்வு – (MY CHOICE - 2) காலம் : 3.00 மணி

அறிவுரைகள்:1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

2. கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14x1=14**

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

   இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்

2. ‘விளியறி ஞமலி’ - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

3. “மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

   தன்னேர் இலாத தமிழ்!” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

   இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

4. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

   அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்

   ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி. வேங்கடசாமி

   இ) தமிழ்த் தென்றல் - 3. திரு.வி.க.

   ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

5. “மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

   மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்” என்று கூறும் நூல்

   அ) புறநானூறு ஆ) சிந்தாமணி இ) தமிழ்விடுதூது ஈ) நன்னூல்

6. தமிழர் குடும்பமுறை என்ற கட்டுரையின் ஆசிரியர்

   அ) வெ. இறையன்பு ஆ) உத்தமசோழன்

   இ) உ.வே. சாமிநாதர் ஈ) பக்தவத்சல பாரதி

7. உரிச்சொல் தொடருக்கு உதாரணம்

   அ) மாமயிலை ஆ) மலரடி இ) வெங்குருதி ஈ) வளர்தலம்

8. புணர்ச்சி விதி தருக. அருங்கானம்

அ) ஈறுபோதல்

ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

9. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அ∴றிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் ------

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

10. படிமம் என்ற சொல்லின் பொருள்

அ) காட்சி ஆ) கருத்து இ) சொல் ஈ) ஓவியம்

11. சரியானது எது?

அ) திருவளர்ச் செல்வன் ஆ) திருநிறைச் செல்வன்

இ) திருவளர்செல்வன் ஈ) திருநிறைச் செல்வி

12. கோடை மழை சிறுகதையில் மருந்துக்கடை வைத்திருப்பவர்

அ) ஆறுமுகம் ஆ) பாபு இ) ராஜீ ஈ) வெள்ளைச்சாமி

13. திருணை என்பதன் பொருள்

அ) புன்செய் ஆ) திண்ணை இ) ஓலைப்பெட்டி ஈ) விதைப்பெட்டி

14. தமிழ்த்தேனீ என அனைவராலும் அழைக்கப்பட்டவர்

அ) திரு.வி.க ஆ) தெ.பொ.மீ

இ) மயிலை சீனி. வேங்கடசாமி ஈ) விபுலானந்த அடிகள்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x2=6**

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.

16. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

17. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

18. இல்வாழ்வின் பயன் யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x2=4**

19. புக்கில், தன்மனை – விளக்குக.

20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. மீ அண்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7x2=14**

22. **கலைச்சொற்களுக்குத் தமிழ்ச்சொல் தருக.**

அ) Arrival ஆ) Departure

23. **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**

அ) தந்தனன் ஆ) சாற்றி

24. **விடைக்கேற்ற வினா அமைத்தல்**

அ) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது

ஆ) குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

25. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) முதல்லே நம்மாலே முடிஞ்சதை நாம் செய்வோம்.

ஆ) ஊரு நல்லா இருந்தாதான் நாம நல்லாயிருப்போம்.

26. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய், நிறைய தன்னம்பிக்கை கொள்.

27. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

நான் சுடு தண்ணீரில் குளித்தேன்.

28. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) ஆங்கவற்றுள் ஆ) பெருங்கடல்

29. சிறுகாப்பியத்தின் இலக்கணம் யாது?

30. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடம் சுட்டிப்பொருள் விளக்குக.

32. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

33. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

34. வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2x4=8**

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37. மயிலை சீனி. வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுதுக.

38. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் நோக்கில் அழகியல் கூறுகளில் சொற்புலம் பற்றி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக .** **3x4=12**

39. நிரல்நிரை அணியைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. **பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- திரிகூட ராசப்பக் கவிராயர்

41. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :**

அ) தாமரை ஆ) வெங்காயம் இ) தலைமை ஈ) கோவில்

42. ‘சுத்தமான சூழல்’ அல்லது ‘நெகிழியற்ற சமுதாயம்’ என்னும் தலைப்பில் 8 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

43. **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

**(அல்லது)**

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக** **3x6=18**

44. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக

**(அல்லது)**

சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

45. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47. அ) ‘ஒருமையுடன் ---’ எனத் தொடங்கும் தெய்வமணி பாடலை எழுதுக.

ஆ) ‘மகற்கு’ என முடியும் குறள்.

# SHRI KRISHNA ACADEMY

- ✍ QUESTION BANK AND MINIMUM MATERIALS for ALL SUBJECTS AVAILABLE FOR X,XI,XII.
- ✍ CREATIVE QUESTIONS , STUDY MATERIALS(TOPPER GUIDE).
- ✍ FULL TEST QUESTION PAPERS ,ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 ,99768 73243

தமிழருவி
ஒவ்வொரு மாணவனின் உயிர்நாடி

கணினிக்கல்வி
கட்டற்ற கல்வி களஞ்சியம்

www.tamilaruvi.in

www.kaninikkalvi.com

TNPSC NOTE

www.tnpscnote.com

**TNPSC, TRB TET, TRB PG ASSISTANT, GROUP I GROUP II, GROUP IV, UPSC, RRB, NMMS, NEET, BANK EXAM, CTET, UGC, NTA-NET, CSIR-NET, SET, SLAS, POSTAL, SET, CURRENT AFFAIRS, TNUSRB**

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான கையேடுகள், கல்வி செய்திகள், அரசாணைகள் போன்றவற்றை மேற்கண்ட இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். போட்டித்தேர்வுகளுக்கு தேவையான நடப்பு செய்திகள், சமச்சீர் புத்தகங்கள், பொது அறிவு புத்தகங்கள் ஆகியவையும் மேற்கண்ட இணையதளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.



"Dream is not that which you see while sleeping. It is something that does not let you sleep."
-APJ Abdul Kalam